சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் திங்கட்கிழமை

இடைமனு எண்.4/2024

இன்

அசல் வழக்கு எண்.534/2019

....

கருப்பாயி ....மனுதார் / 2ம்பிரதிவாதி

..எதிர்..

1. சிவகாமி
2. முத்துலெட்சுமி
3. ராஜகுமாரி
4. ஜானகி .....1 முதல் 4எதிர்மனுதார்கள்
5. ஆறுமுகம் ..... 1ம் பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 25-02-2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எம். மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் K.ராஜாக்கிளி அவர்கள் ஆஜராகியும், 5-ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜரில்லாததால் அவரை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

## உத்தரவு

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமான 01.01.1980ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மூக்கழகன் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து எழுதி வைத்துள்ள அசல் ஆவணத்தை உரிய நேரத்தில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்று, அதனை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 11 ரூல் 14ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**</u>

தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான குறும்பலூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னையா முத்தரையர் மகன் மூக்கழகனுக்கு பாத்திய அனுபவமாக இருந்ததில், அந்த மூக்கழகன் நல்ல sound and disposing state of mind ல் இருந்த பொழுது தாவா சொத்துக்கள் அனைத்தும் தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி ஓர் பதிவு செய்யப்படாத உயில் சாசனத்தை எழுதி வைத்துள்ளார். அந்த மூக்கழகன் இறந்த பிறகு தாவா சொத்துக்களை அவர் எழுதி வைத்த 01.01.1980ம் தேதி பதிவு இல்லாத உயில் சாசனத்தின்படிஅவரின் மகளான 1ம் பிரதிவாதி பாத்தியம் அடைந்து தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி தனித்து அனுபவித்து வந்ததில், 1ம் பிரதிவாதியிடம் தாவா 'B' schedule சொத்துக்களை நான் கடந்த 04.09.2006ம் தேதிய Register கிரையப்பத்திரம் மூலம் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு 1ம் பிரதிவாதியிடம் தாவா 'B' schedule சொத்துக்களை மனுதாரர் கிரையம் பெற்று நெடுகிலும் வரி செலுத்தி அனுபவித்து வருகிறார். மனுதாரருக்கு கிரையம் கொடுத்த பொழுது 1ம் பிரதிவாதி மனுதாரரிடம் அவர் தகப்பனார் அவருக்கு எழுதிக் கொடுத்த 01.01.1980ம் தேதிய அசல் உயில் ஆவணத்தையும் மனுதாரரிடம் கொடுத்து இருந்ததில், அது வெண்ணிலை உயில் சாசனம் என்பதால், பாதுகாப்பு கருதி மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை.

மனுதாரரை இந்த வழக்கில் பி.வா.சா.1 ஆக விசாரித்த பொழுது அந்த உயில் சாசனத்தை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய முயன்ற பொழுது, அந்த உயில் சாசனத்தில் கையெழுத்திட்ட நபர்கள் மூலமே குறியீடு செய்ய வேண்டும் என ஆட்சேபனை தெரிவித்ததால், அப்பொழுது அந்த உயில்சாசனத்தை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவில்லை. அந்த உயிலில் சாட்சி கையெழுத்திட்ட 2 நபர்களும், உயில் எழுதியவரும் இறந்துவிட்ட நிலையில், அந்த உயிலில் 1வது சாட்சியாக கையெழுத்து செய்த பழனியப்பன் மகன் மணியை மனுதாரர் தரப்பு 2வது சாட்சியாக மனுதாரர் விசாரித்து, அவருடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து, அந்த உயிலை பற்றி உயிலில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து மனுதாரரது தகப்பனாரின் கையெழுத்து என பி.வா.சா.2 தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் by over side-ல் மேற்படி உயில் சாசனத்தை அவர் மூலம் குறியீடு செய்யாமல் விடுபட்டுவிட்டது. அதுவும் வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல. மேற்படி உயில்

சாசனம் மனுதாரரது வழக்கை நிரூபிக்க மிக முக்கியமான ஆவணமாகும். அந்த ஆவணத்தை DW2 மூலம் குறியீடு செய்வதை எதிர்மனுதாரர்கள் எந்த விதத்திலும் ஆட்சேபிக்கக் கூடியதில்லை. இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

3) 4-ம்<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

மனுதாரர்/2வது பிரதிவாதி அசல் உரிய நேரத்தில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்று அதனை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்வதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் தனித்த சுவாதீனம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 03.01.2024ம் தேதியன்று வாதிகள் தரப்பு சாட்சியங்கள் முடித்துக்கொள்ளப்பட்டது. 22.02.2024-ம் தேதியன்று பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். பின்னிட்டு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. மனுதாரர்/2வது பிரதிவாதி 01.01.1980 தேதியிட்ட போர்ஜரியான உயிலை ஏற்படுத்தியுள்ளார். அந்த உயில் சம்பந்தமாக பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். பி.வா.சா.2 தனது சாட்சியத்தில்,

"1980 உயில் எழுதிவைத்ததாக சொல்வது பற்றி எனக்கு நேரடி விபரம் ஏதும் தெரியாது என்பது சரிதான். நேரடியாக உயில் எழுதி வைத்தது பற்றி எனக்கு தெரியாததால், என் அப்பா கையெழுத்து போட்டது பற்றி அனுமானத்தின்பேரில் சொல்கிறேன் என்றால் சரிதான்". என சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிக்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி தனது தகப்பனார் மூக்கழகனுக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் தாவா சொத்துக்கள் அனைத்தும் தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி 01.01.1980-ம் தேதி ஓயர் உயில் சாசனம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அந்த உயிலில் சாட்சி கையெழுத்திட்ட 2 சாட்சிகளும் அந்த உயிலை எழுதிய நபரும் இறந்துவிட்டதால், அந்த உயிலில் 1வது சாட்சியாக கையெழுத்திட்டவரின் மகன் மணி என்பவரை மனுதாரர் தரப்பு DW2 விசாரித்தபோதுஎஅந்த உயில் சாசனம் குறியீடு செய்யப்படாமல் விடப்பட்டுள்ள தாகவும், அதனால் மேற்படி ஆவணத்தை உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்று மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவேண்டும் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதனை ஆட்சேபணை செய்து 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்/2வது பிரதிவாதி 01.01.1980 தேதியிட்ட போர்ஜரியான உயிலை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த உயில் சம்பந்தமாக பி.வா.சா.2 தனது சாட்சியத்தில் நேரடியாக உயில் எழுதி வைத்தது பற்றி தனக்கு தெரியாது என தெரிவித்துள்ளார் என்பதால் தாவா மனுவினை ஆட்சேபணை செய்துள்ளார்.

7) தாவா அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனித்த சுவாதீனம் கோரி 2019-ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் தரப்பில் 01.01.1980ம் தேதிய உயில் சாசனத்தை பி.வா.சா.2-ன் மூலம் குறியீடு செய்து கொள்ள உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது குறியீடு செய்வதற்காக மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி உயில் போர்ஜரியானது என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாக மனுவில் தெரிவித்துள்ளார். அசல் வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரம் இருதரப்பு விசாரணைக்கு பின்பு தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர் மனுவை அனுமதித்தால் தான் அவரது வழக்கினை நிரூபணம் செய்ய இயலும். எனவே வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் கருதுகிது.

முடிவாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.23 15:30:41 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.23 15:30:53 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.4/2024 in
O.S.No.534/2019
**Draft/Fair/Order**
23.03.2026.